Registered as a News Paper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2024  தை 24  [ 06 - 02 - 1993 ]  சனிக்கிழமை  ஓசை 354

## 4 தினங்களில் மூன்று கண்மாற்றுச் சிகிச்சை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண்மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த நான்கு நாட்களில் கண்பார்வை இழந்த மூன்று நோயாளர்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் இறந்தவர்களின் கண்கள் பொருத்தப்பட்டன. விழிப்புணர்வோருக்கான இந்தக் கண் மாற்றும் அறுவைச் சிகிச்சையை கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன் வெற்றிகரமாக நிறைவேற்றினார். இன்று மற்றுமொரு கண் மாற்று (5 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்து பாதையை திறக்குக; உணவு பொருள்களை அனுப்பிவைக்குக

## சி. பி. ஐ. தலைவர் கொழும்பு இரகசிய விஜயம்

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணை மேற்கொண்டுவரும் இந்திய சிறப்புப் புலனாய்வுத் துறைத் தலைவர் திரு. கார்த்திகேயன் இரகசியமாக இலங்கைக்கு சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் விடுதலைப் புலிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் இவர் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

## வலி - வடக்கில் சிக்கிய மக்களை விடுவிக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

வலிவடக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கித் தவிக்கும் அப்பாவிப்பொதுமக்களில் மேலும் ஒரு தொகுதியினர் விடுவிக்கப்படவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் தங்கியிருப்பவர்களில் அனேகமானவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கே விரும்புகின்றனர். இவ்வாறு வெளியேற விரும்புபவர்களது பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு இராணுவ உயர் அதிகாரிகளது பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படுபவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திடம் மட்டுமே தற்பொழுது உள்ளது இதனால் மேற்படி பட்டியல் தற்பொழுது இவ் அலுவலகத்துக்கு (5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆயர் அரசிற்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டு மக்கள் தங்கு தடையின்றிப் பயணம் மேற்கொள்ள உதவும் வகையில் போக்குவரத்துப் பாதையைத் திறந்துவிடுமாறும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை கப்பலில் அனுப்புமாறும், மனித நேய ஸ்தாபனங்கள் உணவுப் பொருள்களைக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தருமாறும் கோரும் மகஜர் ஒன்றை யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.



யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு அனுப்பும் இரண்டாவது மகஜா இதுவாகும். பொருளாதாரத் தடை மற்றும் போக்குவரத்துத் தடையினால் குடா நாட்டு மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை உள்ளடக்கியதாக இந்த மகஜர் அமையும் எனத் தெரியவருகிறது.

மேதகு ஆயர் டிசம்பர் 16 ஆம் திகதி 1992 இல் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மகஜரை யாழ். ஆயர் சார்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப், வரும் 11 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியைச் சந்திக்கும் போது அவரிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப் (5 ஆம் பக்கம் பார்க்க)

### பலாலி படை முகாமில்

## தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 பேர் நேற்று விடுதலை

[நமதுநிருபர்]

சிறிலங்கா கடற்படையினரால் கடலில் வைத்து கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக் ... உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

விடுதலை செய்யப்பட்ட 20 பேரினது விபரங்களும் வருமாறு: வரதராஜா மகேந்திரராஜா (குருநகர்), ரமணானந்தசாமி தேவதாஸ், ஷரிப் [5 ஆம் பக்கம் பார்க்க]

## 25 தமிழ் இளைஞர்கள் பலாலி முகாமில் கொலை

### விடுவிக்கப்பட்டவர் தகவல்

[வடமராட்சி]

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் முதல் வருட காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் நாங்கள் பலமாக தாக்கப்பட்டோம். அந்த ஒரு வருட காலமும் பலாலி முகாம் எமக்கு சித்திரவதை கூடமாகவே இருந்தது. எமது கண் முன்னால் பல தமிழ் இளைஞர்கள் அடித்தும், சுட்டும் கொல்லப்பட்டது மட்டுமல்லாமல் உடலில் மின்சாரமும் பாய்ச்சப்பட்டனர்.

இவ்வாறு பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இரண்டு வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கதிரவேலு - தவேந்திரன் (வயது 23) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது நானும் என்னுடன் ஏழு பேர் இந்தியாவை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கடற்பகுதியில் கடற்படையினரால் 25-02-1991 இல் கைது செய்யப்பட்டோம். ஏழு பேரும் கடற்படையினரால் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு [5 ஆம் பக்கம் பார்க்க]

### காயமடைந்தவர்

வதற்கே விரும்புகின் றனர். இவ்வாறு வெளியேற விருப்பு

...தேறிய ... ட்டியல் தற்பொழுது இவ் அலுவலகத்துக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

யெதாக இந்த மஜர் அமையும் எனத் தெரியவருகிறது. மேதகு ஆயர் டிசம்பர் 16

## பலாலி படை முகாமில்

# தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 பேர் நேற்று விடுதலை

(நமது நிருபர்)

சிறிலங்கா கடற்படையின ரால் கடலில் வைத்து கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் 20 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் தேடுதல் சேவையின் மூலம் விடுவிக்கப்பட்டனர். இம் மூவரும் மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரதிநிதிகள் இவர்களைப் பொறுப்பேற்று அழைத்து வந்து சங்க காரியாலயம்முன் நேற்று இரவு 8 30 மணிக்கு உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

விடுதலை செய்யப்பட்ட 20 பேரினது விபரங்களும் வருமாறு: வரதராஜா மகேந்திரராஜா (குருநகர்), ரமணா எந்தசாமி தேவதாஸ், ஷரிப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மேலும் 39 பொது மக்கள் பலாலியில் தடுத்துவைப்பு

(நமது நிருபர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் மேலும் 39 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாகக் கடற் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்களும் இதில் அடங்குவர் என நேற்று விடுதலையான ஒருவர் தெரிவித்தார். இதுவரை காலமும் கைதுசெய்யப்பட்டோரில் 59 பேர் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 20 பேர் நேற்று விடுதலையானதை அடுத்து ஏனையோர் தொடர்ந்தும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பங்குனிய ற்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை முற்பகல் 9 30 மணிதொடக்கம் 10.00 மணிவரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## செஞ்சிலுவை -படைஅதிகாரி காங்கேசன் குறித்து பேச்சு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை துறைமுகத்தில் இருந்து உணவுப் பொருள்களை காங்கேசன் துறை பாதையூடாக யாழ். குடா நாட்டிற்கு எடுத்து வருவதற்காக பலாலி இராணுவ உயர் அதிகாரியுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் விரிவான முறையில் ஆராய்ந்ததாக தெரியவருகின்றது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை வவுனியாவில் முடிந்ததாம்

(கொழும்பு)

வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் முடிவுக்கு வந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. வவுனியா விளைந்து மன்னார்வீதி வழியே நடத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இரண்டு வைக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

# பலாலி முகாமில் கொலை

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் முதல் வருட காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் நாங்கள் பலமாகத் தாக்கப்பட்டோம். அந்த ஒரு வருட காலமும் பலாலி முகாம் எமக்கு சித்திரவதை கூடமாகவே இருந்தது. எமது கண் முன்னால் பல தமிழ் இளைஞர்கள் அடித்தும், சுட்டும் கொல்லப்பட்டது மட்டுமல்லாமல் உடலில் மின்சாரமும் பாய்ச்சப்பட்டனர்.

இவ்வாறு பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இரண்டு வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கதிரவேலு - தவேந்திரன் (வயது 23, தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது நானும் என்னுடன் ஏழு பேர் இந்தியாவை நோக்கி சென்று கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கடற்பகுதியில் கடற்படையினரால் 25-02-1991 இல் கைது செய்யப்பட்டோம். ஏழு பேரும் கடற்படையினரால் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சென்றவாரம்ஏழாலை எறிகணை வீச்சினால் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அரியகுட்டி நல்லையா (60) நேற்று நள்ளிரவு மரணம் அடைந்தார்.

இவர் மிகுந்த ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி)

## பாலியல்வன்முறைக்கு மரண தண்டனை விதிப்பு

(மன்னார்)

மன்னார் முள்ளிக்குளத்தில் பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒருவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளால் அதி உயர் தண்டனையான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

முள்ளிக்குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வேலன் தர்மலிங்கம் (செல்வன், வயது 29) என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த திருமணமான இளம்பெண்ஒருவரைத் தனிமையில் வைத்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதற்காக நேற்றுப் பகல் 11.15 மணியளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# பெருமளவு உணவுப் பொருள் கடலில் வீசப்பட்டன

(வடமராட்சி)

பெருந்தொகையான சீனி, மா, சர்க்கரை புளி, ஹைலண்ட் பால்மா, பிஸ்கட் வகைகள், செத்தல் மிளகாய் ஆகிய உணவுப் பொருள்கள் பொலிகண்டி கடலில் வீசப்பட்டு காணப்பட்டன.

இப்பொருள்கள் பழுதடைந்தநிலையில் காணப்பட்டபோதிலும், பலநூறு பேருக்கு நிவாரணமாக வழங்கப்படக்கூடிய அளவில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இப்பொருள்களுடன் பருத்தித்துறைப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பாவிக்கப்பட்டுவந்த வறுமை நிவாரண முத்திரை "பீ" குதி அட்டைகளும் வீசப்பட்டு காணப்பட்டன.

நேற்று நண்பகல் இப்பகுதியில் இருந்த இவ் உணவுப் பொருள்களை கண்ட மக்கள் உணவுத் தட்டுப்பாடான நேரத்தில் இவ்வளவு பெருந்தொகையான பொருள்கள் வீசப்பட்டதைக் கண்டு ஆச்சரியம் தெரிவித்தனர். (யோ)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலை 6 00

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தையற் பயிற்சி வகுப்புகள்

அனுபவம் வாய்ந்த டிப்புளோமாத் தகைமை உடைய ஆசிரியையால் விஞ்ஞான முறையிலான வெட்டுக்களும் சித்திர வேலைப்பாடுகளும் தையல் வகுப்புகளில் பயிற்றப்படும். தொடர்பு கொள்ளவும்: 414 கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [4215]

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஒடருக்கு சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (4211)

### பற் சிகிச்சை நிலையம்

சென்றல கிளினிக் (எஸ்.பீ. சாமி அன் கோ கட்டிட பின்புறம்) யாழ். பஸ் நிலையம் அருகில் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் பா. நே; தின சரி 12 ந.ப - 2 பி.ப வரை (சி-4057)

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எமமிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (யாழ் வைன் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

---

# A/L 92

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

மீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

❋ பகல்நேர (Day Classes)

வார இறுதி நாள் (Weekend Classes)

வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

## புதிய உயர் கல்லூரி

*(NEW COLLEGE OF HIGH STUDIES)*

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாண.

[சி-5921]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

(7 - 2 - 1998)

மலர்வு: 25 - 12 - 1961



உதிர்வு: 08 - 01 - 1998

தேசிங்ராஜா யோகராஜா (B. Com)

[ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி]

---

# நினைவு கூருகின்றோம்...

## 1993-2-6

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - பருத்தித்துறைப் பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சேகர்** [அப்புக்குட்டி முத்துசேகர் - சந்திராங்கூடல், தொற்றாவத்தை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்.]

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பாலு-சிக்காக்கோ** [முருகேசு ஜெயகாந்தன் - பருத்தியோலை, கந்தரோடை, சுன்னாகம் - யாழ்]

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்ட 2 தமிழர்கள் தவசிக்குளம் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

யாழ் - பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள். வல்வை, பொலிகண்டிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு யாழ் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வெள்ளை** [செபமாலைறெஜினோல்ட் ஜோன்குமார் - வெள்ளை வீதி, இளவாலை - யாழ்]

**அமுதன் சிவா** [பேதுருப்பிள்ளை இராஜேஸ்வரன் - கரந்தன் வீதி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம் - யாழ்]

**கபில்** [பரமசாமி உருத்திரசிங்கம் - விளானை, கலைபூமி, காரைநகர் - யாழ்]

1988 ஆம் ஆண்டு யாழ் - பனிப்புலம் பகுதியில் இந்தியப் படையினர் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

[முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளரும், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளருமான]

**மேஜர் பிரசாத்** [கந்தசாமி முரளிதரன் - 'அஜந்தா' மூளாய், சுழிபுரம் - யாழ்.]

1989 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், ஈச்சிலம்பற்றைப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**டெஸ்மன்** [செல்லத்துரை ரவீந்திரன் - மூதூர் - திருமலை]

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**நேசன்** [கந்தசாமி நாகராசா - கட்டைக்குளம் - வவுனியா]

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ரவிராஜ்** (ராஜசுந்தரலிங்கம் இந்திரன் - ரவிராஜ் வீதி, கொக்குவில் - யாழ்.)

**யோகன்** [கந்தையா யோகநாதன் - யோகன் வீதி இருநெல்வேலி தெற்கு - யாழ்]

இதே ஆண்டு தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**செல்லத்துரை தனபாலசிங்கம்** [நவாலி, மானிப்பாய் - யாழ்]

1991 ஆம் ஆண்டு திருமலையில் தேசவிரோதக் குழுவினரின் மூகாமினைத் தாக்கிவிட்டு வருகையில் தமிழீழக் கடற்பரப்பில் [ஜமாலியா] எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த -

**மேஜர் கமல்** (கோபால் அருளானந்தம் - திரியாய் - திருமலை)

**மேஜர் மதி** [அருளம்பலம் வரதராஜன் - 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை]

**மேஜர் சுரேஷ்** [சின்னத்தம்பி தயாபதி - 2-ம் வட்டாரம், நிலாவெளி - திருமலை]

**கப்டன் நேமி** [சண்முகம் பஞ்சலிங்கம் - 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை]

**கப்டன் அன்ரன்** [குப்பையன் இராமநாதன் - 2-ம் வட்டாரம், குச்சவெளி திருமலை]

**கப்டன் ரகு** [சண்முகராசா பிறேம்குமார் - காட்டுக்குளம், திரியாய் - திருமலை]

**கப்டன் மகேஷ்** [சுப்பிரமணியம் முகுந்தன் - சாமாதுவின் - திருமலை]

**லெப். கிருபன்** [குமாரசாமி உதயகுமார் - 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை]

**லெப். கில்பேட்** [குவசநாட் கொன்ஸ்ரன்ரைன்ஸ் - சாம்பல்தீவு - திருமலை]

**2-ம் லெப் சாந்தன்** (ஹனா முகைதீன் நியாஸ் நிலாவெளி - திருமலை)

**2-ம் லெப். அசோக்** (பொன்னுத்துரை லிங்கேஸ்வரன் - திருமலை)

**2-ம் லெப். நவா** (செ. யோகராசா - கோபாலபுரம், கங்குவேலி - திருமலை)

**பைரவன்** (இராமசாமி கணேசன் - திருமலை)

**காந்தி** (சித்திரவேல் சிவராசா - 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை)

**விஜி** (பொன்னையா ஸம்போதரன் - குச்சவெளி - திருமலை)

**சின்னமதி** (சிவலிங்கம் செல்வேந்திரன் - கங்குவேலி, மூதூர் - திருமலை)

**குமார்** (புண்ணியமூர்த்தி சதீஸ்வரன் - திருஞானசம்பந்தர் வீதி - திருமலை)

**கருணா** (இராசையா வரதராஜா - நிலாவெளி - திருமலை)

**சின்னசுரேஷ்** (துரையப்பா இராஜேந்திரன் - சாம்பல்தீவு - திருமலை)

**ஜொனி** (வின்சன்ற் ஒஸ்வோல் நிமலராஜ் - திருமலை)

**கப்டன் குகன்** (கந்தசாமி மகேந்திரன் - மோகன் மாஸ்ரர் வீதி, கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ்.)

**2-ம் லெப். சங்கர்** (இராசரத்தினம் செல்வகுமார் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை - யாழ்.)

---

எளிமை! இனிமை!! திறமை!!!

அழைத்து மகிழுங்கள்!

## "பாடு நிலா"

(மெல்லிசைக் குழு)

பல தரமான இசைக் கலைஞர்களைக் கொண்டு விசேஷ சலுகைகளுடன் நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள்.

### இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

தொடர்பு:-
யோ. மகேந்திரா [சிற்பி]
5, (17), கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [4206]

---

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வழங்கும்

## முழுநிலா நாள் அறிவியலரங்கு

## தேசிங்ராஜா யோகராஜா (B. Com)

[ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி]

ஆளுக்கொரு தேதியிலே ஆண்டவன் அழைப்பான்
ஆனாலும் உன் ஆத்மாவை ஆண்டவன்
ஆண்டுகள் முப்பதொன்றில் அழைத்துவிட்டான்.
மீண்டும் இனியொருகா பிறப்பெய்த வேண்டுமென்றோ
ஆசையில் அவன் உன்னை அழைத்தானோ
காண்போமா? இனி... கணக்கியல் ஆசானை என்று
கலங்குகின்றனர் உன் கல்வியின் மாணவர்கள்
ஆறாத்துயர் கொண்டனர் ஆசிரியர்கள்
மீளாத்துயில் கொண்டவனே! உன்
உடன்பிறப்புக்கள், உறவினர்கள், உள்ளம் கலங்கி
நிற்கின்றனர்.

பேராப்போன உன்புகழ் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அமரத்துவம் அடைந்த தே. யோகராஜாவின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள். இரங்கல் உரைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

6 02-93 [சனி] இன்று வீட்டுக்கிருத்தியமும் அந்தியேட்டி கிரியையும் நடைபெறும். 7-2-93 [நாளை] ஞாயிறு அன்று எமதில்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணம், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[இதைத் தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும்)

தாய். சகோதரர்கள்,
உறவினர்கள்.

சாவற்கட்டு,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

(4227)

## அறிவியலரங்கு

காலம்: 6-2-93 சனி பிற்பகல் 3.30மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

பொருள்: "உலகின் சமகாலப் போக்கு"
- அ. குமாரவேல்

பிற்பகல் 3.30 - 4.30 வரை

"உயர் இரத்த அழுத்தம்"
டாக்டர் சே. ஆனந்தராசா
- MD, MRCP

பிற்பகல் 4.30 - 5.30 வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு: இத்தினத்தில் மைதான விரிவாக்க அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக்கல்லூரி.

(சி-5944)

2-ம் லெப். சங்கர் (இராசரத்தினம் செல்வகுமார்-
அராலி வடக்கு, வட்டுக்
கோட்டை - யாழ்.)

1991 ஆம் ஆண்டு யாழ் - தச்சன்காட்டுச் சந்தி சிறிலங்கா இராணுவ மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தகர்ப்பு முயற்சியின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

சுக்ளா [பாலசுப்பிரமணியம் முகிலன் - 260, கச்சாய் வீதி, சாவகச்சேரி - யாழ்]

1992 ஆம் ஆண்டு வவுனியா - நொச்சிமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

லெப். ஐயனார்-சிறீகாந் [நாகசாமி மகேந்திரன்-
சாளம்பைக்குளம் - வவுனியா]

2-ம் லெப். சில்வெஸ்ரார்-கதிரொளி [தர்மலிங்கம் கண்ணன் - பூவரசங்குளம், ஓமந்தை -
வவுனியா]

வினோதன் [செல்வராசா சந்திரகுமார் - 4-ம் கண்டம், கற்சிலைமடு, ஒட்டிசுட்டான்-
முல்லைத்தீவு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ-5945)

# ஈராண்டு நிறைவு

ஈராண்டுகள் பூர்த்தியடையும்

## எழிலகம்

பல்வகையிலும் நமக்கு ஆதரவுவழங்கிய தமிழீழ மக்களிற்கு நன்றி தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றோம்.

மூன்றாம் ஆண்டிலும் மேலும் வளம் பெற தங்கள் நல் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

## எ ழி ல க ம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 5938)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் குகன்**
(கந்தசாமி மகேந்திரன்)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 10-06-1964 | 06-02-1990 |

தமிழ் ஈழத்தின் மீதினிலே பாசமது கொண்டிருந்தாய்!
தமிழர்களின் வாழ்வுயரத் தக்க வழி காட்டி நின்றாய்!
அமிழ்தாம் எம்தமிழ் வாழ அண்ணன் வழி தொடர்ந்து சென்றாய்!

வெற்றிக் களிப்போடு விரைந்து நீ வருகையிலே
பற்றுக் கொண்டோ...... ஆழ்கடலும் உன்னுயிரைப்
பெற்றுக் கொண்டது! கந்தசாமி மகேந்திரனே!
கப்டன் குகனே! கலங்கி நாம் நிற்கின்றோம்!
பொம்பர்ஹெலிவந்திடலாம்! குண்டுகளும்போட்டிடலாம்!
எம்மவரா அஞ்சிடுவோம்? எதிரிகளை விரட்டிடுவோம்!
தங்கத்தமிழ் ஈழம்தன்னைத்தரணியிலேஅமைத்திடுவோம்!
எங்கள் புலிமறவா! உன்எண்ணமதைநிறைவேற்றிடுவோம்!

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய 21 போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்
உற்றார், உறவினர்கள்
நண்பர்கள்

மோகன் மாஸ்ரர் வீதி,
கரணவாய் தெற்கு
கரவெட்டி.

[4217]


# மங்கள ஆரம்பம்



சுவையருவி வடமராட்சி நோக்கிப் பாய்கின்றது
நெல்லியடி பேருந்து நிலைய அண்மையில்

# "சுவை வெள்ளம்"

யாழ். சுவையருவியின் இணைநிலையம் இன்று 6. 2. 93 காலை மங்களகரமாக நெல்லியடி பேருந்து நிலைய முன்றலில் ஆரம்பிக்கப்படுகின்றது.

★ குளிர்களி (ஐஸ்கிறீம்)
★ குளிர்பான வகைகள்
★ சிற்றுண்டி வகைகள்
★ தேநீர் - கோப்பி

உங்கள் மங்கள நிகழ்வுகளிற்குத் தேவையான பல்வகை உணவு, பான கோரிக்கைகள் குறித்த தவணையில் வழங்கப்படும்.

சிறந்த தரம்! குறைந்த விலை!! நிறைந்த சேவை!!! கவர்ச்சி - சுத்தம் - சுகாதாரம்

ஒருங்கிணைந்த சூழல். இன்றே வருகை தாருங்கள்.

தலைமை நிலையம்
**சுவை அருவி**
மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சுவை வெள்ளம்**
குளிர்சாலை
பேருந்து நிலையம்,
நெல்லியடி.

இணை நிலையம்
**இன்சுவை**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/5939]

# தமிழீழபொருண்மியமேம்பாட்டுக்கழகம் நடாத்தும்

# வதிவிட வேளாண்மைப் போட்டி 1992 / 1993

## யாழ். மாவட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடாத்தும் 2ஆவது வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விதிகள், நிபந்தனைகள் 15ஆம், 16ஆம் 17.01.93ஆம் திகதிகளில் முறையே ஈழநாடு, உதயன், ஈழநாதம் பத்திரிகைகளில் வெளிவந்தன. இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் முடிவு திகதி 30.01 93 என குறிப்பிடப்பட்டுள்ளது போட்டிகளில் கலந்து கொள்வோரை ஊக்குவிக்கும் முகமாக போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 15. 02 93 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் பத்திரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்ட, கோட்ட ச் செயலகங்களிலும், வட்ட இணைப்பாளர் அலுவலகங்களிலும், கமநலசேவை நிலையங்களிலும் பெற்று இப்போட்டியில் கலந்து உற்பத்திகளை பெருக்கும் அதே வேளையில் அதியுயர்ந்த பரிசில்களையும் பெறுமாறும் வேண்டுகின்றோம்.

பயன்தரும் மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தலும், கால்நடை வளர்ப்பிற்கான பதிவேடுகள் பேணப்படுதலும் புள்ளி வழங்கும்போது முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும்.

## வெற்றியீட்டுவோர்க்கான பரிசின் விபரம்:

| | | |
|---|---|---|
| 01). | மாவட்ட மட்டம்: | 1-ம் பரிசு - புத்தம் புதிய நீர் இறைக்கும் இயந்திரம் றொபின 20'' |
| | | 2-ம் பரிசு - ரூபா 8000/- |
| | | 3-ம் பரிசு - ரூபா. 6000/- |
| 02). | கோட்ட மட்டம்: | 1-ம் பரிசு - ரூபா. 5000/- |
| | | 2-ம் பரிசு - ரூபா. 3500/- |
| | | 3-ம் பரிசு - ரூபா. 2500/- |
| 03). | உதவி அரசாங்க அதிபர் வட்ட மட்டம்: | 1-ம் பரிசு - ரூபா. 2000/- |
| | | 2-ம் பரிசு - ரூபா 1500/- |
| | | 3-ம் பரிசு - ரூபா. 1000/- |

மேலும் 100க்கு மேற்பட்ட ரூபா. 750/- பெறுமதிமிக்க பல ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

ஆடு. மாடு, முயல், தாரா, கோழி, தேனீ, பயிர்வகை, உற்பத்தி போன்றவற்றில் மட்டும் சிறப்பாக மேற்கொண்டிருப்பின் சிறப்பு பரிசில்களும் வழங்கப்படும்.

தனித்தனி பயிர்கள் சிறப்பு உற்பத்தி, பழவகை நாற்றுகள், இயற்கைமுறை நோய்த் தடுப்பு கையாளுதல், உரியமுறையில் திறம்பட பதிவேடுகள் பேணுதல் போன்றவற்றை தனி, தனியாக செய்பவர்களும் இப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். இதன் மூலம் முதலிடம் பெறுவோர்க்கும் சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.

இப் போட்டிக்கான புள்ளிமதிப்பீடுகள் 10-03-93-ம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

[சி-5948]


# சமுத்திரா உற்பத்தி நிலையம்

SAMUTHIRA

பிரதானவீதி, தொல்புரம், சுழிபுரம்.

'வளம் பேணுவோம் வளமுடன் வாழ்வோம்'

## நல்லின கோழி வளர்ப்பு

பின்வரும் உங்கள் கோழி வளர்ப்பிற்கான தேவைகளை நாம் பூர்த்தி செய்வோம்

முட்டையிடும் கோழி
முட்டையிடும் பருவக்கோழி
வளர்ப்புக் கோழி / குஞ்சுகள்

இவற்றிற்கான வெவ்வேறு, தரமான தீவனமும் எம்மிடம் விற்பனைக்குண்டு.

மேலும் உங்கள் உணவுத் தேவைக்கான இறைச்சிக் கோழி, கோழி முட்டை ஆகியவற்றை நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளுங்கள்


விபரங்களுக்கு நேரடியாக **எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.**

❋ தொகையாக வேண்டில் முற்கூட்டி பதிவு செய்யவேண்டும்.

6-2-93 - நிர்வாகிகள்

[சி-5947]


## 45-ம் நாள் நினைவலைகள்



### வீரவேங்கை சுரேந்தர்
(ஆனந்தசாமி ஆனந்தராஜ்)

அன்புவழிபுரம் திருக்கோணமலை

திருமலையில் மலராய் — மணலாறில் வரலாறாய்

1970-06-4 — 1992-12-24

திருமலையில் திருமகனாய் ஆனந்தசாமி ஜமுனா ராஜேஸ்வரியின்
புதல்வனாய் பிறந்தாய் சுரேந்தர்
தமிழீழ தாய்மண்ணோ எதிரியவன் பிடியினில் வீழ்ந்திடவே!
தமிழ் தாயின் தன்மானம் காத்திடவே தமிழீழ விடுதலை புலிகளுடன் 1985 இல் இணைந்தாய்
தமிழீழ பகுதிகளில் எத்தனை எத்தனை ... களங்களை எதிர்மீது
வீறு கொண்டு ஆடினாய்
ஆனாலும் எத்தனை ... எத்தனை ... விழுப்புண்களையும் உன் உடலில் தாங்கினாய்
இறுதினில்! தமிழீழ எல்லையாம் மணலாறு மண்ணின் கொக்கு தொடுவாயில்
1992 முடிவுதனில் எதிரிமீது வீறு கொண்டு ஆடிய சரித்திரம் படைத்த களம்தனில்
உன் மூச்சு அடங்கியதோ...மாவீரா!
ஆனாலும் உன் தமிழீழ சுதந்திரமூச்சு இன்னும் அடங்கவில்லை.

(வீரமரணம் அடைந்த அனைத்து போராளிகளையும் இந்நாளில் நினைவு கூறுகின்றோம்)


இன்று[06-02-93] எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியையிலும் மதியபோசனத்திலும் உற்றார் உறவினர் நண்பர்கள் போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்!

அப்பா, அம்மா
அண்ணன்மார், தம்பிமார்
தங்கைமார், மருமகன்

பழைய பாடசாலைவீதி,
இணுவில்மேற்கு இணுவில். (4229)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 03 – 11 – 1968



மறைவு: 06 – 02 – 1989

### வீரவேங்கை யோகன்
(கந்தையா யோகநாதன்)

விழுதுவிட்டு வேர் பரப்பிப்
பேராலாய், படரவெனப் பிறந்தாய் — என்றும்
தொழுதடிமையாய் தமிழர் வாழார் என்று
துடித்தெழுந்து குரல் கொடுத்த யோகநாதா......
வீட்டுக்கிருந்த விடிவிளக்கே — எம்முடைய
நாட்டுக்குரிய திருவிளக்காய் ஆனாயே
உன் பிரிவால் எம்உதிரம் இதயம் எல்லாம்
உருகியொரு பேராறாய்ப் பாயுதையா!
பெருகிவரும் கண்ணீரை அடக்கி, நல்ல
பேறுகள்நீ பெறுகஎன இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் நீறாகும் நெஞ்சங்கள்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள் சித்தப்பாமார்,
சின்னம்மாமார்,
மாமாமார், மாமிமார்.

யோகநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு.
(4222)

## சிந்தனைக்கு

வறுமையின் கலசத்திற்குள் ஒரு கையால் சிறு 'பென்னி' யை போட்டு விட்டு, மறுகையால் பெரும் 'ஷலிங்' கை அவன் எடுத்துக் கொண்டான்.

— ராபர்ட் போலாக்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 06 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2389 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# வங்கி அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வங்கிகளில் பணக் கொடுக்கல் வாங்கல் செய்வதற்குப் பணப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை நிவர்த்திக்கும் பொருட்டு வங்கியின் வேலை நேரத்தை மாலை 4.00 மணி வரையில் நீடித்துள்ளதோடு, கப்பலில் பணம் அனுப்புமாறு கொழும்பிலுள்ள தலைமைப் பீடத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வங்கிக் கிளைகள் கோரியுள்ளதாகவும் அறியவருகின்றது.

கடந்த காலத்தில் வாடிக்கையாளரின் தேவை கருதியும், நன்மை கருதியும் வங்கியின் வேலை நேரத்தை நீடிக்குமாறு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் எதுவித விட்டுக் கொடுப்பும் இன்றிச் சில மணி நேரங்களுடன் தமது சேவையை நிறுத்திக் கொண்ட வங்கிகள் இன்று, மாலைவரை வங்கியின் நலன் கருதித் தமது சேவையை நீடித்துள்ளன,

இதே போன்றே வாடிக்கையாளர்களின் தொகை அதிகரிக்கவும், வைப்பில் இடும்தொகையை அதிகரிக்கவும் பகீரத முயற்சிகளையும், பிரசாரங்களையும் மேற்கொள்ளும் சில வங்கிகள், கடன் வழங்கவோ, மக்களின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யவோ தயாராக இல்லை. அதாவது, வங்கியின் நலன் கருதி முயற்சிகளை மேற்கொள்ளும் வங்கியாளர்கள் மக்களின், வாடிக்கையாளர்களின் நன்மை கருதிச் செயற்படுவதாக இல்லை.

இதேபோன்றதொரு நடவடிக்கையாகவே கடந்த வருட இறுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து பணத்தைக் கொழும்பிற்கு அனுப்பிய வங்கிகளின் நடவடிக்கையைக்கொள்ளவேண்டும். இது இவ் வங்கி அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பணச் சுற்றோட்டத்தின் தன்மையைச் சரியாகப்புரிந்து கொள்ளாமையும், தமது பதவி உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு செயற்படுகின்றமையுமே இந்நிலை உருவாகக் காரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வங்கிகள் நாட்டின் நெருக்கடியைக் காரணம் காட்டித் தமது கையிருப்பைக் குறைத்துக் கொண்டமையும், யாழ்ப்பாணத்தில் இருந்து பணத்தைத் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தமையுமே இன்று பண நெருக்கடிக்குக் காரணமாகும். அதாவது, வடக்கில் இருந்து எதையும் அனுப்புவது சுலபம். மீளப் பெறுவது சிரமம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாமையே காரணமாகும்.

## மன்னார் ஆயருக்கு பொது வரவேற்பு

உருப்பராய் புனித மிக்கேல் தேவாலயத்தின் முன்னால் பங்குத் தந்தையும் மன்னார் மறைமாவட்டத்தின் புதியஆயருமான பேரருட் திரு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்கட்கு உருப்பராய், நீர்வேலி புத்தூர் புன்னாலைக் கட்டுவன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அளிக்கும் பொது வரவேற்பு வைபவம் நாளை காலை ஆறு முப்பது மணியளவில் இடம் பெறவுள்ளது. அதைத் தொடர்ந்து ஏழு மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தலும்நடைபெறும்

## ஒத்தி வைக்கப் பட்டுள்ளது

இன்றும் நாளையும் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவிருந்த 'திரிசங்கு சொர்க்கம்' என்னும் நாடக மேடையேற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குழந்தை ம சண்முகலிங்கத்தின் தயாரிப்பில் உருவான இந் நாடகம் எதிர்வரும் பதின் நான்காம் திகதி காலை பத்து மணிக்கும், பிற்பகல் மூன்று மணிக்கும் மேடையேற்றப் படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக் கழக இந்து மன்றம் மேற் கொண்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்னாலை மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இணுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 2.00மணிக்கு நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தமிழக சட்டப் பேரவையில்

# ஆளுநர் உரையை நிராகரித்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

(சென்னை)

தமிழ்நாடுசட்டப் பேரவையில் நேற்றுமுன்தினம் ஆளுநர் உரையாற்றுவதற்கு முன்பாக பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்டுருட்டி ராமச்சந்திரன் மார்க்சிய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் தம்புசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள்.

ஆளுநர் பீஷ்மநாராயண்சிங் அவைக்கு வந்ததும் பண்டுருட்டி ராமச்சந்திரன் அறிக்கை ஒன்றைப் படிக்க முயன்றார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கூச்சலில் அவரது உரையைக் கேட்கமுடியவில்லை இதனைத் தொடர்ந்து அவர் அவையிலிருந்து வெளியேறினார். தொடர்ந்தாற்போல் தம்புசாமியும் அறிக்கை ஒன்றை வாசிக்க முயன்று அவையிலிருந்து வெளியேறினார்

இதன் பின் ஆளுநர் தன் உரையை வாசிக்கத் தொடங்கியதும் எதிர்க்கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான திருநாவுக்கரசு எழுந்து ஆளுநர் உரையில் குறுக்கிட முயன்றார். உடனே சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அவரைச் சபையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிட்டார் அதைத்தொடர்ந்து திருநாவுக்கரசு அவையிலிருந்து தானாகவே வெளியேறினார்.

பின்பு செய்தியாளரிடம் பேசிய பண்டுருட்டி வெளிமாகாணங்களில் வாழும் தமிழருக்கு தகுந்த பாதுகாப்பை மத்திய அரசு வழங்கவில்லை என்பதற்காகவும் மாநில அரசு அரிசி விலையை உயர்த்தியதற்காகவும் எதிர்ப்புத் தெரிவித்து தாம் வெளிநடப்புச் செய்ததாகத்தெரிவித்தார்

பத்திரிகைச் சுதந்திரம் பறிப்பு, அரிசி விலை உயர்வு நிலவரி உயர்வு, சட்ட ஒழுங்கு சீர்குலைவு ஆகிய காரணங்களுக்காக மாநில அரசைக் கண்டித்துத் தான் அவையிலிருந்து வெளியேறியதாகத் திருநாவுக்கரசு தெரிவித்தார்இதே காரணங்களுக்காக மார்க்சிய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினரும் வெளியேறினார்.

தி.மு.க மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆளுநர் உரையை முற்றாகப் புறக்கணித்தார்கள்.

தமிழக சட்டப் பேரவையின் வரவு செலவுத்திட்டத்துக்கு முந்திய குறுகிய காலக் கூட்டத்தொடர் தொடங்கிய போதே பகிஷ்கரிப்பு இடம் பெற்றது.

## செய்தித்தாள்கள் மீது அரசு பலத்த அச்சுறுத்தல்

### 'ராவய' ஆசிரியர் கண்டனம்

நாட்டில் சுதந்திரமாக இயங்கும் செய்தித்தாள்கள் அரசின் பலத்த அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதாக 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக அரசுக்கு எதிராகச் செயற்படும் பத்திரிகைகள் மீது அரசும், அரசுச்சார்பு நிறுவனங்களும் பலத்த நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன. தொழில்வசதிகள், செயற்படு வசதிகள் போன்றவை வெட்டப்பட்டுள்ளன. அத்துடன் இவை அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிநிலுவைகளை எல்லாம் உடனடியாகச் செலுத்தும்படி உத்தர விடப்பட்டுள்ளது.

யுக்திய, ராவய, லக்திவ ஆகிய சுதந்திரப்பத்திரிகைகள் மீது அதிகளவு நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறது. வருமான வரி, விற்பனை வரி என்று அனைத்து நிலுவைகளும் செலுத்தப்பட வேண்டும் இல்லை மின்சாரம் நீர், தொலைபேசி வசதிகள் நிறுத்தப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகைகள் இவ்வாறு உடனடியாக வரிகளைச் செலுத்தினால் மறுநாள் பத்திரிகை வெளியிட பணம் இல்லாது போய்விடும் என்று கூறப்படுகிறது. அத்துடன் அரசு தனது விளம்பரங்களை வழங்குவதையும் திடீரென்று நிறுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து தனியார் நிறுவனங்களும் இவற்றுக்கு விளம்பரம் வழங்குவதை நிறுத்திவிட்டன.

அரசின் இந்த நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்ட சண்டே ரைம்ஸின் ஆசிரியர் "இவ்வாறான அரசின் பத்திரிகைகள் மீதான நெருக்கடிகள் செய்திச் சுதந்திரத்தின் மீது விழும் புதிய அடி" எனத் தெரிவித்தார்.

## மணவாள கோல விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய மணவாள கோல விழாவும், இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் நேற்று மாலையும் இன்று காலையும்நடைபெற்று வருகிறது. (யோ)

## கிளி. மக்கள் வங்கி பயிர் செய்ய கடன் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மக்கள் வங்கி காலபோகச் செய்கைகளுக்கென 80 லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

1992ஆம் ஆண்டு முதல் 507 விவசாயிகளுக்கு இவ் விவசாய புனர்வாழ்வுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக் கடனைப் பெற்ற விவசாயிகள் தாம் பெற்ற கடன்களை ஒழுங்காகமீளச்செலுத்தும் பட்சத்தில் தொடர்ச்சியாக ஆறு பருவகாலம் பயிர்ச் செய்கைகளுக்கும் இக்கடன் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## 4 தினங்களில்

அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. ஐந்து மாதங்களுக்கு முன் வைத்தியசாலையில் தங்கியிருந்து, கண்தானம் கிடைக்காமல் துண்டுவெட்டி வெளியேறியவருக்கே இன்று கண் மாற்றுச் சிகிச்சை நடைபெறவுள்ளது.

கண்கள் கிடைத்தால் திங்

## செஞ்சிலுவை

வடக்கு கடலில் வைத்து பிடிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்காக பலாலி இராணுவமுகாம் சென்ற போது இப்பேச்சுவார்த்தை நடைபெற்றதாக அறிய வருகின்றது.

## வலி-வடக்கில்

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப் படுவதற்குத் தகுதியானவர்களது பெயர்ப்பட்டி

## ஊரடங்கு

## 25 தமிழ்

தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் பலாலி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம். என்னுடன் கைது செய்யப்பட்டவர்களில் மூவர் களுத்துறை முகாமுக்கு அனுப்பப்பட்டனர் ஒருவர் தப்பியோடிவிட்டார். மிகுதியான இருவர் இன்னமும் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட முதல் வருட காலப்பகுதியில் சீரான உணவு வகைகள், உறக்கம் இல்லாமல் பல கஷ்டங்களுக்கு உள்ளானோம். இவ்வேளையில் விடுதலைப் புலிகள் இராணுவ முகாம்களைத் தாக்கி இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்படும் போது இராணுவத்தினரால் நாங்கள் பலமாகத் தாக்கப்பட்டோம்.

27-02-1992 இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எம்மைப் பொறுப்பேற்ற பின்னர் எமக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்தது. பலாலி இராணுவ முகாமில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் படு கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் கையில் சிக்குண்ட நாம் மீண்டும் வருவோம் என

யாழ்ப்பாணத்தில் இருந்து பணத்தைத் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தமையுமே இன்று பண நெருக்கடிக்குக் காரணமாகும். அதாவது, வடக்கில் இருந்து எதையும் அனுப்புவது சுலபம். மீளப் பெறுவது சிரமம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாமையே காரணமாகும்.

பணத்தை கொழும்பு அனுப்புவதானால் இங்கிருந்து ஓர் அதிகாரி கப்பலில் சென்று ஒப்படைத்துவிட்டு வரலாம் ஆனால் அங்கிருந்து பணம் வருவதாகில் வங்கிகளின் தலைமையகங்களின் அனுமதி, கூட்டுப்படை தலைமையகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதோடு கப்பல் போக்குவரத்து வசதியாக அமைவதோடு. ஒரு வங்கி அதிகாரியும் கப்பலில் வடக்கே வந்து பணத்தை ஒப்படைத்துச் செல்ல ஒப்புக் கொள்ள வேண்டும். இது பல மாத முயற்சிகளினாலேயே நடைபெறக்கூடியவையாகும்.

ஆனால் இதனை அதிகாரிகள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எவ்வளவு பணத்தை இங்கிருந்து சேர்த்து அனுப்ப முடியுமோ அவ்வளவு பணத்தை அனுப்புவதும் தலைமையகத்தில் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்வது மட்டுமே அவர்களின் குறிக்கோளாக இருந்துள்ளது.

அதாவது பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை என்பவற்றால் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் வேளையில் பணச் சுற்றோட்டமும் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. ஆனால் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத்தடை என்பவற்றிற்கு அரசாங்கமே முழுக்காரணமாகினும் பணச்சுற்றோட்டத்தில் ஏற்பட்ட தடங்கல்களுக்கு தனியாக அரசு மாத்திரம் காரணமல்ல. யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி உயர் அதிகாரிகளுமே காரணமாகும். அதாவது வங்கி அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலும் சுயநலப் போக்குமே காரணமாகும்.

---

கிடைக்காமல் துண்டுவெட்டி வெளியேறியவருக்கே இன்று கண் மாற்றுச் சிகிச்சை நடைபெறவுள்ளது.

கண்கள் கிடைத்தால் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கண் அறுவைச் சிகிச்சை நாள்கள் உள்ளிட மற்ற நாட்களிலும் கண் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள கண் சிகிச்சைப் பிரிவு தயார் நிலையில் இருப்பது பாராட்டுதற்குரியது.

மேலும் ஒருவர் இறந்தபின் உறவினர் அவர் கண்களைத் தானம் வழங்கப் பின்நிற்பதாகவும், இறந்தபின் தமது கண்களைத் தானம் செய்வதற்கான உறுதிமொழி வழங்கச் சிலர் தயங்குவதாலும் விழிப்புலன் நிறோருக்குக் கண்களைப் பொருத்த முடியாத நிலை உள்ளதாக டாக்டர் கபிலா செல்லத்துரை கவலை தெரிவித்தார் இரத்தானம் போல் கண் தானம் செய்ய தமிழ் மக்கள் மனிதநேயத்துடன் முன்வரவேண்டும் என்றார் அவர்.

கண்களைப் பழுதடையாமல் பாதுகாப்பாக இருபது நாள்கள் வரை வைக்கக் கூடிய எம். கே. மீடியம் என்ற கருவி யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று நாள்கள் பாதுகாத்து வைக்கக்கூடிய வசதிகளே உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

வருகின்றது.

## வலி-வடக்கில்

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப் படுவதற்குத் தகுதியானவர்களது பெயர்ப்பட்டியல் கிடைத்ததும் ஒருதொகுதி மக்கள் விடுவிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தடுத்து

குஷேல் [மன்னார்], நவரட்ணம் ஞானரட்ணம், துரைச்சாமி சந்திரலிங்கம், அருளானந்தசாமி ராமகிருஷ்ணன், சிவசாமி சோதிநாதன் (ஆத்திமோட்டை, மன்னார்), கதிரவேலு தவேந்திரன், தங்கராசா ஜெயக்குமார் (சுன்னாகம்), தேவசகாயம் அருள்நேசநாயகம், செல்வமாணிக்கம் அப்புத்துரை. ஐயாசாமி செல்லத்துரை, சுப்பிரமணியம் குலேந்திரன், கதிரவேலு யோகேஸ்வரன், துரைச்சாமி புஸ்பராசா, கயித்தாம்பிள்ளை குசைப்பிள்ளை (45) மாதகல், ஞானம் ரவீந்திரன் (28) நாச்சிக்குடா, நெப்போலியன் சேவியர் ஈனண்டோ (47) மாதகல், குயினஸ் (23) தெல்லிப்பழை.

விடுவிக்கப்பட்டோரில் ஜெயக்குமார், செரிப்குஷேல் ஆகிய இருவரும் சொந்த விருப்பின் பேரில் நேற்று மதியம் விமானமூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

---

ஆசிரியர் "இவ்வாறான அரசின் பத்திரிகைகள் மீதான நெருக்கடிகள் செய்திச் சுதந்

## ஊரடங்கு

மணியுடன் நீக்கப்பட்டுள்ளது. எனினும் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் படையினது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தொடர்ந்தும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என்று கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## போக்குவரத்து

படுகிறது.

இதே வேளை, கிறிஸ்தவ ஆயர்கள் மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகள் சம்பந்தமாகத் தென் இலங்கையில் கிறிஸ்தவ ஆயர்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவ

தூரப் பிரதேசம்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்திற்காக ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

---

மேற்பட்ட இளைஞர்கள் படு கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் கையில் சிக்குண்ட நாம் மீண்டும் வருவோம் என நினைத்துக் கூட பார்க்கவில்லை.

நாங்கள் விடுதலையாகி வரும்போது,

"'நீங்கள் விடுதலைபெற்றுச் சென்று விடுதலைப் புலிகளுடன் இணைந்து எமக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்துவீர்கள். உங்களை நம்பமுடியாது' என இராணுவத்தினர் எம்மைப் பார்த்துக் கூறினர்.

நாங்கள் விடுதலையாகி வரும்போது ஈ. பி. டி. பியை சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா எம்மைச்சந்திக்கவிரும்புவதாக இராணுவம் தெரிவித்தது. நாம் மறுத்துவிட்டோம். இராணுவம் எம்மை வற்புறுத்தவில்லை என்றார்.

ரவீந்திரன் என்பவர் கூறுகையில்;

பலாலியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரில் 17 பேரும், பெலவத்தையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோருமாகச் சேர்த்து 40 பேரை விடுதலை செய்ய இருப்பதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்ததை தாங்கள் கேட்டதாகவும், அன்றுமுதல் தானும் விடுதலை செய்யப்படுவேனா என்ற எதிர்பார்ப்புத் தனக்கு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

# 6-ம் வருட நினைவு

## வீரவேங்கை கபில்

(பரமசாமி உருத்திரலிங்கம்)

அன்னை மடியில்: 20-09-1970 — தமிழ் மண்ணின் மடியில்: 06-02-1987

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமசாமி உருத்திரலிங்கம் (கபில்) கட்டுவனில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, தம்பி,
தங்கைமார், மாமன்மார்,
மாமிமார், சித்தப்பாமார்,
சித்திமார், மற்றும்
உற்றார், உறவினர்கள்.

விளானை,
காரைநகர்.

[4231]

# 5-ம் ஆண்டு நினைவலைகள்



## மேஜர் பிரசாத்

(கந்தசாமி முரளீதரன்)

(முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளரும், யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளரும்)

தாயின் மடியில் 18-9-1962 — தமிழீழ மண்ணில் 6-2-1988

"வேங்கையாய் எழுந்தாய் விண்ணை நிமிர்ந்தாய்
வீரனாய் நின்று வீதியில் மடிந்தாய்
ஆயிரம் ஆயிரம் இளம்புலி வருவர்
ஆயுதம் எடுத்தே தாயகம் பெறுவர்."

## சித்திரத் தேர்

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு பகுதியில் இருக்கும் கந்தசுவாமிகோவிலுக்குபுதியசித்திரத் தேர் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அச்சேற்று விழா இன்று நண்பகலில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் க நவரத்தினம் அவர்களும், ம. சிவானந்த சர்மா அவர்களும் சிறப்புரைகளையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டம்

தமிழீழக்கல்விமேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்றுசனிக்கிழமை மு ப. 10 00 மணிக்கு தமிழீழக் கல்விக்கழக அலுவலகத்தில் நடைபெறுமெனவும் சகல அங்கத்தவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் செயலாளர் கேட்டுள்ளார்.

## நூல் வெளியீடு

திரு. கதிர்தணிகாசலம் அவர்கள் எழுதிய "தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்." என்ற நூலின்வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கலாநிதி க. சிற்றம்பலம், பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்

ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஆசியுரை வழங்குவார்.

முதற்பிரதிகளை சிவநெறிக் காவலர்க கனகராசா க சோமசேகரம் ஆகியோர் பெறுவர்.

### மாவீரர் படங்கள் பெற்றுக் கொள்ளலாம்

பின்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் தமிழீழ மாவீரர் பணிமனைகளிலும் மாவட்ட அரசியல் துறை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்டன் றெஜி, மேஜர் அல்பேட், லெப. காண்டீபன் எம். பி., வீரவேங்கை விவேகன், வீரவேங்கை சிவா, லெப். கேணல் புலேந்திரன், வீரவேங்கை விஜி, வீரவேங்கை தனபாலன், வீரவேங்கை ரகுமான், ரஞ்சன் / மாமா, வீரவேங்கை ரவி, வீரவேங்கை குமா, வீரவேங்கை சாமி, வீரவேங்கை அசீஸ், லெப். கேணல் விக்ரர், வீரவேங்கை ராஜ்மோகன், வீரவேங்கை கமல், லெப் ஜோசப், வீரவேங்கை

## வீரச்சாவு



2-ம்லெப். ராகினி
(ராஜினி)

மட்டக்களப்பில் 03-02-1993 அன்று அதிகாலை 1.57 மணியளவில் சுகயீனம் காரணமாக விடுதலைப் புலிகள் பெண் போராளி 2ம்- லெப்டினன்ட் ராகினி/ ராஜினி (அருணாசலம் துரோபதை இலுப்படிச்சேனை, மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வங்கிகளுக்கு பணம் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் இயங்கும் அரச வங்கிகளுக்கு நேற்று முன்தினம்பருத்தித்துறைவந்த குமண என்ற கப்பல்மூலம் திரவ நிலைப் பணம் எதுவும் எடுத்து வரப்படவில்லை.

இம்மாவட்டத்தில் இயங்கும் மேற்படி வங்கிகளில் திரவப்பணத்தின் கையாளுகை மிகக்குறைவாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக இவற்றின் செயற்பாடுகள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[க]

## தைப்பூச விழா

ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளையார் கோவிலில் இன்று சனிக்கிழமையன்று தைப்பூசத்தினத்தைமுன்னிட்டு காலையில் விசேட அபிஷேகமும், பின் மாலையில் திருக்கல்யாணம் மற்றும் சண்முகார்ச்சனை என்பனவும் இடம் பெறவுள்ளன. அத்துடன் கம்பன் கழகத்தின் அமைப்பாளரான இ. ஜெயராஜ் அநுபூதி என்னும் பொருள்பற்றி சொற்பொழிவும் ஆற்றவுள்ளார்.

★ ★ ★

(குருநகர்)

அளவெட்டி தெற்கு (நாகேஸ்வரம்) ...

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி நடராசா

. நடராசா அகாலமரணமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவர்களான நாகமணி தெய்வானை தம்பதிகளின் இளைய புதல்வனும், உஷாவின் அன்புக்கணவரும், திரு. நல்லையாவின் மருமகனும் சண்முகம் தில்லையம்பலம் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), தவமணி மயில்வாகனம், சரஸ்வதி. இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மாணிக்கம், பொன்மலர், கனகமணி, கனகேஸ்வரி, ஞானசிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சண்முகராஜா (உரிமையாளர், ராஜாபிரம்புத் தொழிற்சாலை), சுரேந்திரன், பிரதீபா. கணதீபா, சுரேந்தினி ஆகியோரின் ஆசைமாமனும் பிரியதர்சினி. ஸ்ரீ பாஸ்கரன்(ஜெர்மனி), தயானி (ஆசிரியை. யாழ். திருக்குடும்பக கன்னியர்மடம்). மாவீரன் கரும்புலி கப்டன் அப்பன் ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை, இல 39, மலர்மகள் வீதி [அகிலன் வீதி] யில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து இன்றுகாலை 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மா. சண்முகராஜா
286, ஸ்ரான்லி வீதி, (ராஜா பிரம்புத்தொழிற்சாலை)
யாழ்ப்பாணம்.

[4233]

## சந்திரவர் சிதம்பரப்பிள்ளை

(பொன்னையா மாஸ்ரர்)

அளவெட்டி வடக்கு, கேணிக்கரையைச் சேர்ந்த சந்திரவர் சிதம்பரபிள்ளை பொன்னையா மாஸ்ரர் - முன்னாள் அதிபர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி) அவர்கள் 05-02-1993, வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார் அன்னார் காலஞ்சென்ற திருமதி இராசலக்ஷ்மியின் அன்புக் கணவரும், திருமதிகள் திலகவதி நடராசா [அவுஸ்திரேலியா], மங்கையர்க்கரசி கந்தையா, மங்களேஸ்வரி சிவபாதசுந்தரம், செல்வராணி சபாரத்தினம் [யு. கே], உமாபதிசிவம் [யு. கே] ஆகியோரின் அன்புத் தந்தையாரும். காலஞ்சென்றவர்களான நடராசா [முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதய. மகாஜனா கல்லூரிகள்], டாக்டர் சிவபாதசுந்தரம் [குழந்தை வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], திரு. கந்தையா [ஓய்வுபெற்ற நிருவாக அதிகாரி, நெல் சந்தைப்படுத்தும் சபை], திரு. சபாரத்தினம் (யு. கே), திருமதி சுசித்திரா உமாபதிசிவம், ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-02 - 1993 (இன்று) சனிக்கிழமை யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடி, ஓடை ஒழுங்கை [ராதா ஒழுங்கை] 37 ஆம் இலக்க இல்லத்தில நடைபெற்று. பிற்பகல் 3 00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்
அ. கந்தையா
மருமகன்

[4234]



"வேங்கையாய் எழுந்தாய் விண்மட நிமிர்ந்தாய்
வீரனாய் நின்று வீதியில் மடிந்தாய்
ஆயிரம் ஆயிரம் இளம்புலி வருவர்
ஆயுதம் எடுத்தே தாயகம் பெறுவர்."

உன்னை நேசித்த
உறவினர்களும்,
நண்பர்களும்.

வட்டுக்கோட்டை
[4230]

வேங்கை அசிஸ், லெப். கேணல் விக்ரர், வீரவேங்கை ராஜ்மோகன், வீரவேங்கை கமல், லெப் ஜோசப், வீரவேங்கை கணேஸ், மேஜர் கணேஷ், வீரவேங்கை விஸ்வரம், வீரவேங்கை ரசிந்தன்.

★ ★ ★

(குருநகர்)

அளவெட்டி தெற்கு (நாகேஸ்வரம்) ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை தைப்பூச விழா சிறப்பாக நடைபெறும்.

## அவசரக்கூட்டம்

தென்மராட்சி கோட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் 8 ஆம் திகதி திங்கள் காலை 10.00 மணிக்கு யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அழைப்பு

# கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். அடைக்கலமாதா கோவிலில் 1993-02-06 இன்று காலை 7.00 மணிக்கு இடம்பெறும் திருப்பலிப் பூசையிலும் முற்பகல் 11.00 மணிக்கு வீட்டில் இடம்பெறும் ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி.

அன்புடன்
மனைவி: திருமதி ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார்,
தாய்: திருமதி இராசலட்சுமி சதாசிவம்,
அண்ணா: திரு. சதாசிவம் காந்திதாசன்,
மற்றும் உறவினர்கள்.

128/6, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(4223)

## ஆண்டுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சங்கத் தலைவர் என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் அங்கத்தவர்களுக்கு இலவசமாக ஆண்டுமலர் வழங்கப்படவுள்ளது.



## வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மரணம்)

[அச்சியந்திர தொழில் நுட்பவல்லுனர்]

முத்துக்கிருஷ்ணர் 5-2-93-ல் காலமானார். அன்னார் நேசபூபதியின் அன்புக் கணவரும், அற்புததேவன், புனிதவதி, சிவகுமாரன், பரமானந்தன், யோகேஸ்வரி, தெய்வானைப்பிள்ளை, பூரணசந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரன், தயாபதி, தயாரூபன், காங்கேசன், வேதீசன், மதீசன், சர்மிளா, கோபிகா, தர்சன், அபிரா, அச்சுதன் ஆகியோரின் பேரனும், இராசதுரை, விமலநாதன், விஜயராணி, செல்வராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் காளிகோவிலடி மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு பி. ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
மு. அற்புததேவன்

(சி-5949)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.